# உலக நீதி மன்றம்

ரித்வான் 2020

உலக பஹாய்களுக்கு,

அன்பு நண்பர்களே,

வெளிப்படும் இரண்டு மெய்மைகளால் இச்செய்தியைத் தங்களுக்கு அனுப்பிட நாங்கள் தூண்டப்பட்டுள்ளோம். முதலாம் மெய்மையானது, கொரோனா நச்சுயிரி தொற்று ஏற்படுத்தும் அச்சுறுத்தல் மற்றும் திகிலின் அபாயத்தால் உலகெங்கும் ஏற்படும் அதிகரித்த விழிப்புணர்வு. பல நாடுகளில், இந்தப் பேரிடரைக் கட்டுப்படுத்த துணிச்சலான மற்றும் உறுதியான கூட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் சூழ்நிலை கடுமையாகவே இருப்பதோடு குடும்பங்களுக்கும் தனிநபர்களுக்கும் அவலத்தை ஏற்படுத்துவதுடன் ஒட்டுமொத்த சமூகங்களையே நெருக்கடிக்கு இட்டுச் சென்றுள்ளது. துன்ப மற்றும் துயர அலைகள் ஓரிடத்தைத் தொடர்ந்து இன்னோர் இடத்தைத் தாக்கிவருகின்றது. வெவ்வேறு சந்தர்ப்பங்களில், வெவ்வேறு வழிகளில், வெவ்வேறு நாடுகளைப் பலவீனப்படுத்தும்.

இரண்டாவது மெய்மை, தினமும் மிகத் தெளிவாகத் தெரிகின்ற நமது வாழ்நாளில் இதுபோன்று இல்லாத அளவு எதிர்வினையாற்ற மங்காத வீரியத்துடன் பஹாய் சமூகம் சந்திக்கின்ற சவாலாகும். உங்கள் நடவடிக்கைகள் தனிச்சிறப்பாய்த் திகழ்கின்றன. ஒரு மாதத்திற்கு முன்பு நவ்ருஸ் செய்தியில் நாங்கள் எழுதியிருந்தது போல், தங்கள் வழக்கமான நடவடிக்கைகளின் முறைமையில் இடையூறு ஏற்பட்ட போதிலும் சமூகங்கள் மனதைக் கவரக்கூடிய தன்மைகளை வெளிப்படுத்தியதை நாங்கள் ஆர்வத்துடன் வலியுறுத்தினோம். அதிகரித்திடும் கடுமையான தடைகளை மதித்து நடந்த காலகட்டத்தில் நண்பர்கள் பலர், இவ்வாரங்களில் மேற்கொண்ட நடவடிக்கைகள் எங்களின் போற்றும் உணர்வினை அதிகப்படுத்தியது. உலகின் மற்ற பகுதிகளில் கிடைத்த அனுபங்களின் அடிப்படையில், மக்கள் மத்தியில் பொது சுகாதார தேவைகளில் விழிப்புணர்வினை ஏற்படுத்த சில சமூகங்கள் பாதுகாப்பான புத்தாக்கமிக்க வழிகளைக்

கண்டறிந்தனர். நச்சுயிரியால் அதி ஆபத்தான நிலையிலுள்ளோர்க்கும் அதன் பரவலால் ஏற்படும் பொருளாதார சிக்கல்மீதும் சிறப்பு கவனம் வழங்கப்பட்டுவருகின்றது; உலக பஹாய் செய்திச் சேவையில், குறிப்பிடப்பட்டிருந்த நடவடிக்கைகள் அதன் தொடர்பில் மேலும் மேற்கொள்ளவிருக்கும் எண்ணிலடங்கா நடவடிக்கைகல் வெறும் கையளவேயாகும். இவ்வேளையில் மிகவும் தேவையாய் இருக்கின்ற பரிட்சார்த்தப்பட்ட, மேம்படுத்தப்பட்ட முயற்சிகளாலும் பேணி வளர்க்கப்பட்ட ஆன்மீக பண்புகளாலும்  இவை முழுமையாக்கப்படும். இப்படிப்பட்ட முயற்சிகள் குடும்ப அளவிலும் தனிமையிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆனால், எங்கெல்லாம் சூழல் சாதகமாக அல்லது தொடர்பு சாதனங்கள் சாத்தியமாக இருக்கின்றதோ அங்கு இதே போன்ற வசதிகளைக் கொண்ட ஆன்மாக்களின் தனித்தன்மையான கூட்டு முயற்சி தீவிரமாக மேற்கொள்ளப்படுகிறது. கூட்டு முன்னேற்றத்திற்கு மிகவும் முக்கியமாகத் திகழும் சமூக இயக்கவியல்கள் அடக்கப்படக்கூடாது.

ஒளி படையினரின் சளைக்கா தளபதிகளான தேசிய ஆன்மீகச் சபைகள், இந்த நெருக்கடி காலத்தில் தக்க நடவடிக்கையை மேற்கொள்ள எங்ஙனம் தங்கள் சமூகங்களைத் திறம்பட வழிநடத்தி உருப்படுத்தியுள்ளன என்பதைக் காண்கையில் எங்கள் உள்ளம் மகிழ்கின்றது. அவர்களுக்கு ஆலோசகர்களும் அவர்களின் துணை வாரிய உறுப்பினர்களும் தங்களின் அன்பான சேவைத் தரத்தினை வீரத்துடன் மேலுயர்த்தி எப்பொழுதும் போலவே, வலுவான ஆதரவை வழங்கியுள்ளனர். தங்கள் நாடுகளில் அடிக்கடி மாற்றம் காணும் சூழல்களைப் பற்றி நன்கு அறிந்துள்ளதோடு சபைகள், சமய காரியங்களை நிர்வகித்திட தேவையான ஏற்பாடுகளைச் செய்துள்ளன. குறிப்பாக எங்கெல்லாம் சாத்தியமாக இருக்கின்றதோ அங்குத் தேர்தலை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அடிக்கடி மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளால், ஸ்தாபனங்களும் முகவாண்மைகளும் விவேகமான ஆலோசனைகளையும் ஆறுதலான உறுதி வார்த்தைகளையும் தொடர்ச்சியான உற்சாகத்தையும் வழங்கியுள்ளனர். அவர்கள், பல சந்தர்ப்பங்களில், தங்கள் சமூகங்களில் நிகழும் அர்த்தமுள்ள உரையாடல்களினால் ஏற்படும் ஆக்ககரமான கருப்பொருள்களைக் கண்டறிய ஆரம்பித்துள்ளனர். மனிதகுலத்தின் சகிப்புத்தன்மைக்கான இச்சோதனையானது அதற்கு மாபெரும் உட்பார்வையை வழங்குமென நவ்ருஸ் செய்தியில் நாங்கள்

வெளிப்படுத்திய எதிர்பார்ப்பு இப்பொழுது உணரப்பட்டுகின்றது. தலைவர்களும் பிரபல சிந்தனையாளர்களும் வர்ணனையாளர்களும் சமீப காலத்தில், பொது அரங்கில் பெரும்பாலும் பேசப்படாத மூலாதாரமான கருத்துப்படிவங்கள் குறித்து இப்பொழுது ஆராய முற்பட்டுள்ளனர். தற்சமயம் இவை ஆரம்ப தொலைத் தோற்றங்களே. ஆயினும், ஒரு கூட்டு விழிப்புணர்வு ஏற்படக்கூடும் எனும் சாத்தியத்தை அக்கருத்துகள் கொண்டிருக்கலாம்.

பஹாய் உலகம் செயலில் காட்டிடும் மீட்டெழுச்சியைக் காண்கையில் நாங்கள் அடைந்திடும் அந்த ஆறுதல், மனிதகுலம் நோய்த்தொற்றினால் எதிர்நோக்கும் பின்விளைவுகளாள் எங்களின் கவலை அந்த ஆருதலைத் தணியச்செய்கிரது. அந்தோ, நம்பிக்கையாளர்களும் அவர்களின் நண்பர்களும் இதே மனநிலையில் இருப்பர் என்பதை நாங்கள் உணர்கின்றோம். பொதுஜன பாதுகாப்புக் கருதி நண்பர்கள் மற்றும் உறவினர்களிடமிருந்து கடைபிடிக்கும் தூரம், பலர் அதை பின்பற்றுகின்றனர், ஆனால், சிலருக்கு அது நிரந்தரமான பிரிவை ஏற்படுத்தியுள்ளது. ஒவ்வொரு அதிகாலையிலும் விழித்ததும், அன்றைய சூரிய அஸ்தமனத்திற்கு முன்னர், தாங்கொணாத் துயர்களை எதிர்கொள்ள வேண்டிவரும் என்பது உறுதியாகின்றது. தங்கள் அன்புக்குரியவர்களை இழந்தவர்களுக்கு நித்திய இராஜ்யத்தில் மீண்டும் சந்திப்போம் எனும் வாக்குறுதி ஆறுதலாக இருக்குமாக. அவர்கள் உள்ளம் நிவாரணம்பெறவும் கல்வி, வாழ்வாதாரம், வீடுகள், அல்லது ஒரு வேளை உணவுக்கும் சிரமத்தை எதிர்நோக்கும் அனைவரையும் இறைவனின் கருணை சூழவும் நாங்கள் பிரார்த்திக்கின்றோம். உங்களுக்கும் நீங்கள் நெஞ்சார நேசிப்போர்க்கும், உங்கள் தேசத்தவர் அனைவர்க்காகவும் பஹாவுல்லாவிடம் வேண்டுவதோடு அவர் ஆசிர்வாதங்களையும் தயவினையும் கெஞ்சிக் கேட்கின்றோம்.

பயணிக்கும் பாதை எத்துணை நீண்டதாகவும் சிரமமானதாகவும் இருப்பினும் உங்கள் பயணத்தை வெற்றிகரமாக முடித்திட நீங்கள் கொண்டுள்ள மன உரத்திலும் மன உறுதியிலும் நாங்கள் அதீத நம்பிக்கைகொண்டுள்ளோம். நம்பிக்கை, விசுவாசம், களஞ்சியங்களிலிருந்து தேவையைக் காட்டிலும் மற்றவர் தேவைகளுக்கு முன்னுரிமையளித்து, ஆன்மீக உணவினை பெறத் தவறியோர்க்கு வாய்ப்பினையளித்து, அதிகரித்த அறிவு தாகமுற்றோரைத் திருப்திப்படுத்தி, இவ்வுலகினை மேம்படுத்த

ஏங்குவோர்க்கு வாய்ப்பினை வழங்கிடுங்கள். புனிதப் பரிபூரணரின் பக்தியுள்ள நம்பிக்கையாளரிடமிருந்து இதைவிட குறைவாக நாங்கள் எதிர்பார்க்க முடியுமா?

உலக நீதி மன்றம்.